உ

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கக.] பிரமாதீச ௵ சித்திரைமீ [பகுதி-சு.

## பரிசோதனத்தொடர்.

(திருக்குறள்-ககரு, கூ அச.)

பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

இக் குறளுரை, இயற்கையாகிய மதிநன்மையான் மாட்சிமைப்பட்ட செயற்கையறிவினையுடையார் பொருள்கொடுப்பார்க்கெல்லாம் பொதுவாய ஆசையினையுடைய மகளிரது புல்லியநலத்தைத் தீண்டார்.

மதிநன்மை - முற்பிறப்புக்களிற் செய்த நல்வினைகளான் மனந் தெளிவுடைத்தாதல். அதனானன்றிக் கல்வியறிவு மாட்சிமைப் படாமையின் மதிநலத்தின் மாண்டவறிவினவ ரென்றும், அவ் வறிவுடையார்க்கு அவராசையது பொய்ம்மையும், மெய்ந்நலத்தது பொதுமையும் விளங்கித்தோன்றலின் தோயாரென்றும் கூறினார். என அச்சிட்ட புத்தகங்களிலும், சில ஏடுகளிலும் எழுதப்பட்டிருக்கிறது.

சில ஏடுகளில் விசேடவுரையின் இறுதிவாக்கியம் "அவ்வறிவுடையார்க்கு அவராசையது பொதுமையும், மெய்ந்நலத்தது புன்மையும் விளங்கித்தோன்றலின் தோயாரென்றும் கூறினார். என்றெழுதப்பட்டிருக்கிறது.

"பொதுநலத்தார்" என்றதற்குப் (பொருள்கொடுப்பார்க்கெல்லாம்) பொதுவாகிய ஆசையினையுடையார் என உரையெழுதப் பட்டமையால் அவரது ஆசையின்கட் பொதுமையும், புன்னலம்

*

என்றமையால் அவரது நலத்தின்கட் புன்மையு முண்மையாற் பின்னர்க் காட்டிய ஏடுகளிற் கண்டபடி "அவ் வறிவுடையார்க்கு அவராசையது போதுமையும் மெய்ந்நலத்தது புன்மையும் விளங்கித் தோன்றலின் தோயாரென்றும் கூறினர்" என்றபாடமே சுத்தபாடமாகக் காணப்படுகிறது.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

(இதனுரை) பிறவறங்களும் வேண்டுமாயினும் தவம் ஓருயிரையும் கொல்லாத வறத்தின்கண்ணதாம். அதுபோலப் பிறகுணங்களும் வேண்டுமாயினும் சால்பு பிறர்குற்றம் சொல்லாத குணத்தின் கண்ணதாம்.

நலமென்னும் ஆகுபெயர்ப்பொரு ளிரண்டனையும் தலைமை தோன்ற இவ்விரண்டற்கு மதிகாரமாக்கிக் கூறினர். தவத்திற்குக் கொல்லாவறம் சிறந்தாற்போலச் சால்பிற்குப் பிறர்குற்றஞ் சொல்லாக் குணஞ் சிறந்ததென்பதாம். எனப் பரிமேலழகருரைப்பதிப்புப் புத்தகங்களிலும் ஏடுகளிலும் எழுதப்பட்டிருக்கிறது.

இதனுள் "நலமென்னும் ஆகுபெயர்ப்பொரு ளிரண்டனையும் தலைமைதோன்ற இவ்விரண்டற்கும் அதிகாரமாக்கிக் கூறினர்" என்ற வாக்கியப்பொருள் தெளிவுபெற விளங்கவில்லை.

ஏனெனில், அவ்வாக்கியத்தில் நலமென்பவை என்ன ஆகுபெயர்? அவற்றின் இயற்பொருள் யாவை? ஆகுபெயர்ப்பொருள் யாவை? இவ்விரண்டற்கு மென்றது எவற்றை? அதிகாரமென்ற சொற்குப் பொருள்யாது? அது இங்கு எப்பொருளில் வழங்கப்பெற்றிருக்கிறது? அது பொருத்தமுள்ளதா? எனப் பல ஆசங்கைகள் நிகழ்கின்றன.

இவற்றுள் அவ்வாகுபெயரைப்பற்றி, ஒரு பதிப்பில், நலமென்னும் குணப்பெயர் அறத்துக்கும் பண்புக்கு மாதலால் பண்பாகு பெயர் என்றும், அறமும், பண்பும் இங்குப் பொருளாகக் கருதப்பட்டனவென்றும் கீழ்க்குறிப்பில் விளக்கி யெழுதப்பட்டிருக்கிறது.

அறமும், குணமும் பொருளாகக் கருதப்பட்டதற்குப் போதுமான காரணம் காணப்படவில்லை.

அன்றியும், ஒருபண்பின் பெயர் அப்பண்பினோடொற்றுமையுடைய பண்பியை யுணர்த்துமிடத்துப் பண்பாகுபெயராகும். அவ்வாறன்றி பொரு பண்பின்பெயர் அப்பண்பினோடொற்றுமையில்லாத பிறிதொருபொருளை யுணர்த்துமிடத்துப் பண்பாகுபெயரெனக் கொள்ளுதல் பொருந்தாது. அவ்விரண்டற்கு முளதாகிய இயைபினை யுணர்ந்து அவ்வியைபிற்கேற்ப இன்ன ஆகுபெயரென வழங்குதல் முறையாகும்.

ஆதலால் இங்கு நலமென்னுஞ் சொல்லுக்கு இயற்பொருளிது ; ஆகுபெயர்ப்பொருளிது ; என்பதையும், அவ்விரண்டு பொருட்கு முள்ள இயைபு இன்னதென்பதையும் கண்டு இன்ன ஆகுபெயரெனத் துணியவெண்டும்.

அவற்றுள், நலம் என்னுஞ் சொல்லுக்கு நன்மையின்கண் ஆற்றலுண்மையால் நன்மையே இங்கு அச்சொல்லின் இயற்பொருளெனக் கொள்ளத்தகும்.

உரையில் நலத்தது என்னு மிரண்டிற்கு முறையே "அறத்தின் கண்ணது" "குணத்தின் கண்ணது" எனப்பொருளெழுதப்பட்டமையால் நலமென்னும் சொற்களுக்கு அடைவே அறமும், குணமுமே ஆகுபெயர்ப்பொருள்களாகின்றன. இவற்றுள் குணமென்றது குற்றத்தின் மறுதலையாகிய நற்குணமாம் ; சால்பிற்குரிய ததுவேயாதலால்.

நலமென்பதன் இயற்பொருளாகிய நன்மைக்கும், ஆகுபெயர்ப் பொருளாகிய அறம், குணங்களுக்கும் உள்ளதாகிய இயைபென்னவென நோக்கின், ஒருவனுக்கு அறத்தாலும் குணத்தாலும் நன்மையாகிய காரியம் பிறத்தலாற் காரிய காரண சம்பந்தமென்பது பெறப்படும். பெறவே, ஒருவன் நலமடைதற் கேதுவாகிய அறமும், குணமும் அவற்றின் காரியமாகிய நன்மையின் பெயரால் நலமென வழங்கப்பட்டமையாற் காரியவாகு பெயரெனக் கொள்ளத்தகும்.

விசேடவுரையுள் இவ்விரண்டற்கு'மென்றது இக்குறளுள் எடுத்துக்காட்டுவமையும், பொருளுமாகச் சொல்லப்பட்ட நோன்மை, சால்பு என்னு மிரண்டற்கு மென்றபடி.

அவற்றுள், முறையானே கொல்லாவறத்தினை நோன்மைக்கும், பிறர்தீமை சொல்லாக்குணத்தினைச் சால்பிற்கும் அதிகாரமாக்கிக் கூறினா ரென்பது போதரும்.

இதனுள் அதிகாரம் என்ற சொல்லா லுணர்த்தவேண்டும் பொருள் யாதென வாராயின், "ஒருயிரையும் கொல்லாத வறத்தின் கண்ணது நோன்பு" "பிறர்தீமை சொல்லாத குணத்தின் கண்ணது சால்பு" என்ற உரைவாக்கியங்களால் கண்ணென்னுஞ் சொல்லா லுணர்த்தப்படும் நிலைக்களமாகிய இடவிசேடப்பொருளே இங்கு அதிகாரமென்னுஞ் சொல்லாலுணர்த்தக் கருதிய பொருளெனக் காணப்படுகிறது.

அது, இங்கு நிலைக்களம், ஆதாரம், அதிகரணம், இருப்பிடம் என்னும் பரியாயப்பெயர்களால் வழங்கப்படு மிடவிசேடமாகிய நிலைக்களமாம். அதிகாரமென்பது இப்பொருளில் பரியாயப்பெயராகக் காணப்படவில்லை.

இனி, தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் அதிகாரமுறை என்னும் உத்திவகைக்கு உரையெழுதிய உரைகாரரால், "அதிகாரமென்றசொற்குப் பொருண்மையென்னவெனின் முறைமையெனவும், இடமெனவும், கிழமையெனவுங் கொள்ளப்படும்" எனப் பொருளெழுதப்பட்டன.

அங்கு இடமென்றது ஒரு நூலின் ஏகதேசமாகிய படலமுதலிய வுறுப்பைக்குறித்து வழங்கப்பட்டிருக்கிறது. அது வடமொழியில் ப்ரகரணம் என்னும் பரியாயப்பெயரால் வழங்கப்படும் இடவிசேடமாகும்.

ஆதாரம், அதிகரணம், நிலைக்களம், இருப்பிடம் என்னும் பெயர்களால் வழங்கப்படும் இடவிசேடமே இக் குறளுரையாற் கருதப்படுமிடம்.

இவ்வாறு இடவிசேடத்தை யுணர்த்தும் சொற்களைப் பொதுப் பட இடப்பொருளுணர்த்திற்றென்று நூல்களிற் கூறுதல் இலக்கண வழக்கு. இதனை "அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே" எனப் பொதுப்பட இடப்பொருள வெனக் கூறினும், அவை சுட்டிடப் பொருளாகிய இடவிசேடத்தையே யுணர்த்து மென்பது கருத்தா மாறு காணக.

ஆதலால் பிரகரணமென்பதன் பரியாயப்பெயராகிய அதிகாரம் என்னுஞ்சொல்லா லுணர்த்தப்படும் இடப்பொருண்மை வேறென்ப தும், ஆதாரம் என்பதன் பரியாயப்பெயராகிய அதிகரணம் என்னுஞ் சொல்லா லுணர்த்தப்படும் இடப்பொருண்மை வேறென்பதும் பெறப் படும்.

இவ் விருவகை யிடப்பொருளுள் இக் குறளுரையிற் கொள்ளத் தகு மிடப்பொருண்மை யாதெனில், அறத்தின் கண்ணது குணத் தின் கண்ணது என்று கூறப்பட்டிருத்தலால் கண்ணென்னுஞ் சொல்லா லுணர்த்தப்படும் இருப்பிடமாகிய இடப்பொருளாம். இதுவே, ஆதாரம், அதிகரணம், நிலைக்களம், இருப்பிடம் என்னும் சொற்களா லுணர்த்தப்படும். இது பிரகரணம் என்பதன் பரியாய மாகிய அதிகாரம் என்னுஞ் சொல்லா லுணர்த்தப் படுவதன்று.

இவ் விரண்டினுள், அதிகாரம் என்னும் சொல்லா லுணர்த்தப் படும் படல முதலிய இடப்பொருண்மை இக் குறளுரைக்குப் பொருத்த மில்லதாகவும், அதிகரணமென்னும் சொல்லா லுணர்த்தப் படு மிருப்பிடமாகிய இடப்பொருண்மை பொருத்தமுள்ளதாகவும் காணப்படுகின்றன.

ஆதலால் "நலமென்னும் ஆகுபெயர்ப்பொரு ளிரண்டனையும் தலைமைதோன்ற இவ் விரண்டற்கும் அதிகரணமாக்கிக் கூறினர்" என்றிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

ஸ்ரீ:

# *ராஜ பக்தி.

## சபை வணக்கம்.

### விருத்தம்.

(திருமாற்கும் சபைக்கும் சிலேடை.)

மதியகம் வருத லானு மாநயங் கோட லானும்
விதிதனின் மேவ லானு மின்னுநூற் பணியி னானும்
சதிருறு திதியி னானும் சங்கநன் கமர்த லானும்
துதிபெறு மாலா மிந்தச் சூழவை பணிகு வேனே.

## ராஜபக்தி.

இஃது ஈண்டு இங்ஙனம் பாகுபாடுபெறும்:

1. அன்பு.
2. ராஜபக்தி.
3. அரசனது பெருமை.
4. அரசுமுறையின் நன்மை.
5. ராஜபக்தியைக் கொண்டொழுகுமாறு
6. இக்காலத்துச் சில குறிப்புக்கள்.
7. ராஜபக்தியை வற்புறுத்தல்.
8. முடிபுரை.

---

* இவ் வியாஸம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பன்னிரண்டாவது வருஷக் கூட்டத்தில் மகா-ா-ா-ஸ்ரீ ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை பீ.ஏ., பி.எல்., அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மகா-ா-ா-ஸ்ரீ கா. கோபாலாசாரியர் அவர்களாற் படிக்கப் பெற்றது. ப—ர்.

## 1. அன்பு.

உலகத்தில் மக்களாய்ப்பிறந்தார் பிறர்மாட் டன்புகொண் டொழுகுதல் அன்னார்க்கு இன்றியமையாது வேண்டப்படுவ தொரு சிறப்புக்குணமாம்.

"அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு"

எனத் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிய அருமைத் திருக்குறளில், 'பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின்பய னென்று சொல்லுவர் அறிந்தோர்' என்று உரைத்தருளினர் சிரமேற் புலவர்கொள் பரிமேலழகியார். அதன் கருத்தாவது:—மக்கள் உடம்பு பெற்றிருத்தல் அவர் ஏனைய உயிர்கள்பால் அன்புடையாராய் ஒழுகு தற்கே யென்பதாம். ஆகவே, மக்கட் பிறப்பின் பயன் அன்புடைமை யென்றதாயிற்று. இவ்வாறு, ஒருவன் அன்புடையனா யிருத்தல் வேண்டுமென்று உணர்த்திய தெய்வப்புலவர்,

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்னுங் குறளினுள் அன்பில்லாத உடம்பு உயிருடையதாயினும் உயிரில்லாவுடம்பேயாம் என்னுங்கருத்தினையும் வெளியிட்டருளினர்.

## 2. ராஜபக்தி.

இவ்வாறு சிறப்பிக்கப்பெற்ற அன்பானது தாய் தந்தை குரு தெய்வம் மனைவி மக்கள் உற்றார் நட்டார் முதலானாரிடத்தேயன்றி, வீடு மனை நிலம் தோட்டம் மாடு கன்று பொன் மணி நென் முதலிய பொருள்களிடத்தும் மனிதனுக்கு உளதாதலை நாம் பல்காலும் பார்த் தறிகின்றோம். இவ்வாறே, நமக்கு வேண்டப்படுவனவாய நன்மை களை நாடிச்செய்து நம்மை அன்போடு ஆண்டுவரும் அரசர்மாட்டும் மக்கள் அன்பு செய்கின்றனர். இந்த அன்பு, மாதா பிதா குரு தெய்வம் அரசன் ஆகிய இப் பெரியார்கட் செய்யப்பெறுமாயின் "பக்தி" என்பதோர் உயரிய பெயர் பெறும். மாதருபக்தி, பித்ரு

பக்தி, குருபக்தி, தெய்வபக்தி என்பதுபோலவே "ராஜபக்தி" எனவும் சொல்லுகிறோம். இவர் மாதாவினிடம் பக்தியுடையவர், பிதாவின்கண் பக்திகொண்டவர், குருவின்மாட்டுப் பக்திசெய்பவர், தெய்வத்தின்பால் பக்தியுள்ளவர் என்பதுபோல, மனைவியினிடம் பக்தியுடையவர், மக்களின்கண் பக்திகொண்டவர், மாட்டின்மாட்டுப் பக்திசெய்பவர் என்று சொல்வதொருவழக்காறில்லை. ஆகவே, "பக்தி" என்னும் சொல்லின் வழக்கே மிக்க மேம்பாட்டினைக் குறியாநின்றது என்று அறிகின்றோம்.

## 3. அரசனது பெருமை.

அங்ஙனமாயின், தாய் தந்தை குரு அரசன் ஆகிய இவர் எவ்வகையின் மேம்பாடுடையர் எனின், இவரது மேம்பாட்டிற்குப் பல காரணங்களுளவாயினும், விசேஷமாக இவர் தெய்வத்தன்மையுடையர் என்பதேயன்றித் தெய்வாம்சமுடையர் எனவும் நூல்கள் சொல்வது தான்.

"அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்"

"குருர்விஷ்ணுர்க் குருர்ப்ரஹ்மா குருர்த்தேவோ மஹேசுவரஃ
குருரேவ பரம்ப்ரஹ்ம தஸ்மைஶ்ரீ குரவேநமஃ"

"நாவிஷ்ணுஃ ப்ருதிவீபதிஃ"

எனவுங் கூறுப. இதுபற்றியன்றே

"குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை"

எனக் குமரகுருபரருங் கூறினர். இச்செய்யுளில், கொழுநன் குலமகட்கும், பெற்றோர்—பிள்ளைகட்கும், குரு—பிரமசரிய நிலையுடையார்க்கும் தெய்வமாதல்போலன்றி, அரசன் எல்லார்க்குந் தெய்வமாவான் என்றதனாலே அவனிடம் தெய்வத்தன்மை தெய்வாம்சங்களின் மிகுதி உணரப்பெறும். ஞானங்கனிந்து நலங்கொண்ட நம்மாழ்வார் என்னும் சடகோபமுனிவரும் ஸாமவேத ஸாரமான தமது திருவாய்மொழி யென்னும் திவ்யப்ரபந்தத்தில்,

"திருவுடை மன்னரைக்காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்"

என அரசரைத் திருமாலின் உருவாக உரைத்தருளினூர். இதனையே கொண்டு, திருக்குறளுக்குச் சிறக்கவுரைசெய்த, தரைமேலுரை பெறு பரிமேலழகியார் "இறைமாட்சி" என்னும் அதிகாரத்தில், உலக பாலருருவாய் நின்று உலகங்காத்தலின் 'இறை' யென்றார். "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தார் என அரசர் திருமாலின் அம்சமென்பதைப் பிரமாணங்காட்டி உரைத்தனர். 'இறை' என்னுஞ்சொல் கடவுள் அரசன் ஆகிய இருவர்க்கும் பொதுப்பெயராதலும் அறிக. "இறை சிவன்கடன்வேந்தன்கை யிறையிறுப் பிறை சிறந்தோன்" என்பது நிகண்டு. 'இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்கினி, வருணன், சந்திரன், குபேரன் ஆகிய இன்னோரம்சங்களினாலே அரசன் ஆக்கப் பெற்றான்; மற்றும், இவர்களம்சமாதலின் அரசன் மக்களனைவரினும் மிக்ககாந்தியுள்ளவனாயும், அனைவரையும் ஆளத்தக்க வீரியமுடைய வனாயும் இருக்கின்றான்' என மனுநூல் கூறுநின்றது. இன்னும்,

"அரச னுவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவ ரிவரிவரைத்
தேவரைப் போலக் கொண்டொழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி"

என "ஆசாரக்கோவை" எனும் சங்கநூலில், ஒருவன் தெய்வமெனக் கொண்டு பக்தியோடு வழிபட்டொழுகுதற்குரிய சிறப்புடைய ஐங் குரவர் இன்னார் எனக்கூற வந்தவிடத்து அரசனை முதற்கண் எடுத் தோதினார் முள்ளியார் என்னும் முதறிவாளர்.

வாலியென்ற வானரமன்னன் மரணமெய்திய தருணத்துத் தன் தம்பியாகிய சுக்கிரீவனுக்கு நற்புத்தி கூறுமிடத்து, கல்வியிற்பெரிய ராய கம்பநாடர் இங்ஙனம் ராஜபக்தியை அவ்வாலியின் வாய்மொழி யாக எடுத்துரைக்கின்றார்.

"அரசியற் பாரம் பூரித் தயர்ந்தனை யிகழா தையன்
மரைமலர்ப் பாத நீங்கா வாழுதி மன்ன ரென்பார்
எரியெனற் குரியா ரென்றே யெண்ணுதி யெண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம் பொறுப்பரென் றெண்ணவேண்டா"

அஃதாவது - நீ அரசச் செல்வமடைந்ததனால் நினக்கு அரசளித்த ஸ்ரீராமனை மறந்து அலக்ஷியஞ் செய்யேல்; அவன்றிருவடிக் கீழ்ச்செய்யத்தகும் பணிகளைச் செய்து வாழ்வாயாக; அவனுக்குச் சீற்றமுண்டாமாறு ஒழுகேல்; ஏனெனின், அரசர் ஒருவர் செய்த குற்றத்தைப் பொறுப்பரென்று நினையேல்; அரசர் நெருப்பினையொப்பர்; என்பதே.

"அளையுறை பாம்பு மரசு நெருப்பும்
முழையுறை சீயமு மென்றிவை நான்கும்
இளைய வெளிய பயின்றனவென் றெண்ணி
இகழி னிழுக்கந் தரும்"

என "ஆசாரக்கோவை" என்னும் நீதிநூல் கூறுமாறு பாம்பும் அரசும் நெருப்பும் சிங்கமும் இளையது எளியது பயின்றது என்று அலக்ஷியஞ் செய்வோமாயின் அவை தீங்கிழைக்கும். "அரசரும் பாம்பும் நெருப்பும் சரி" என ஒருவழக்குரையும் உளது. இன்னும், தசரதனது அரசுமுறையினைக் கூறுமிடத்து,

"தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம் பயப்பில்
சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்கு நீரால்
நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னன்"

என, தன்குடிகள்பால் அன்புகொண்டு அவர்களைப் பாதுகாத்தலில் அரசன் தாயினை ஒப்பானென்பதையும், பல நலன்களையும் அளித்தலில் தவத்தினை நிகர்ப்பானென்பதையும், நற்கதியுய்த்தலில் சற்புத்திரனைப்போல்வானென்பதையும், நோய் நேர்ந்தவழி அதனைத்தீர்த்தலில் நன்மருந்தினை மானுவானென்பதையும், நூற்பொருள்களை ஆராய்ச்சிசெய்யப்புகுங்கால் ஐயந்திரிபற்ற மெய்யறிவினையன்னானென்பதையும் கவிசக்ரவர்த்தியார் வெளியிட்டருளினர்.

இங்ஙனம் பன்னூல்களானும் பல்வகையானும் சிறப்பிக்கப்பெற்ற பெருமையினையுடைய அரசனை ஒரு சாமானிய மனிதனென எண்ணுதல் தகாது. கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாமோ? பூவெல்லாந் தாமரையின் பூவாமோ? பாலெல்லாம் நற்பசுவின் பாலாமோ?

கடலுப்புக் கர்ப்பூரமாமோ? கள்ளிச்செடிகற்பகதருவாமோ? கால்வாய் கடலாமோ? ஊர்க்குருவி உவணப்புள்ளாமோ? கைகால்முதலிய உறுப்புக்கள் காணுங்கண்ணாமோ? அதுவேபோல மானுடரெல்லாம் மன்னவராவரோ? மன்னர்பெருமை மற்றையோர்க்கேது? ஆகவே, அம்மன்னவர் மாட்டுத் தெய்வத்தன்மை பாராட்டி அவராணைக்கு அமைந்து ஒழுகல்வேண்டும். யாவரையும் ரஞ்சிப்பிக்கின்றவனாதலின் 'ராஜா' எனவும், எல்லாரினும் மேன்மையுடையனாதலின் 'மன்னன்' எனவும், அனைவர்க்கும் பொதுநிற்பவனாதலின் 'இறையவன்' எனவும் அரசனுக்குப் பெயர் கூறுவர். மற்றும், இவை போல்வனவாகிய பெயர்கள் மன்னவனைக்குறித்து வழங்குகின்றன.

## 4. அரசுமுறையின் நன்மைகள்.

முற்காலத்தில் நந்தேயத்தை ஆண்ட அரசர் தமது கோலின் கீழ்ப்பட்ட குடிகட்குச் செய்துவந்தமையே போல, இக் காலத்திலும் நம்மனைவரையும் அன்போடு ஆட்சிபுரியாநின்ற ஆங்கில அரசரும் நமக்குவேண்டும் நலன்களைச் செய்துவருகின்றனர். அவையாவன: கல்வி, கைத்தொழில், வர்த்தகம், இருப்புப்பாதை, தபால் ஸ்தாபனம், தந்திநிர்மாணம், அச்சுக்கூடம், சமாசார பத்திரிகை, பொதுநலத்திற்குரிய சபை, நீதிவிசாரணைத்தலம், வைத்தியசாலை, சட்டதிட்டங்கள் முதலியவாகப் பலவாம். எந்த நாடாயினும் அந்நாடு செழித்தோங்குதற்குத் தலைமைபெற்ற கருவி கல்வியேயாம். அக் கல்வியை அவ்வக்காலத்திற் கேற்கும்வண்ணம் நம் சிறுவர்க்குப் பயிற்றிவந்தனர். இவர்களும் ஆங்கிலர்முதற் பலரும் வியக்கும்விதம் அக் கல்வியிற் பயின்று தேறிப் பல பெரும்பதவியிலேறிப் பெருமை பெற்று விளங்குவாராயினர். நம்மவர் கூரிய அறிவும் சீரியகருத்தும் உடையராய், கண்ணுற்கண்டதைக் கையாற்செய்யும் ஆற்றலுடையராதல்பற்றி எதனையும் எளிதினறிந்து இயற்றி இன்பம் பெறுவாராயினர். நம் ஆங்கில அரசாக்ஷியார், பின்னால் என்னதீங்கு நேருமோவெனச் சிறிதும் நினையாமே தமது கல்வியாகிய பெருஞ்செல்வத்தை மிக்க உதாரகுணத்தோடு நமக்கு அபரிமிதமாக வழங்கினர். பல்வேறு சாதி மதம் பாஷை நடை நொடி பாவனையுடையதாய்ப் பரவியுள்ள இப் பரதகண்டத்தில் ஆங்கிலர் முதலிய அந்நியர்க்கும் நமக்கும்,

ஒருவர்பாஷை ஒருவர் அறியாமையினல், முன்னிருந்த ஒருவகை வெறுப்புநீங்கி, இப்பொழுது ஒருவருடைய குணதிசயங்களை மற்றொருவர் அறிந்து கலந்து ஒருவர்க்கொருவர் உபகாரசீலராய் ஒழுகுதலன்றியும், தங்களுள் அறிவும் அபிமானமும் ஐக்கியமும் உடையராய் வாழும்வண்ணம் யாவரும் பொதுவான பாஷையாகக்கொண்டு பேசி அளவளாவுதற்கு ஏற்புடைக் கருவியாக ஆங்கில கலாசாலைகளை அமைத்து நம் அரசுமுறையார் நம்மவர்க்கு அறிவூட்டிவருகின்றனர். அதனல், நஞ்சிறுவர் அன்னியநாடுகளின் நடை நொடி பாவனைகளில் ஏற்பனவற்றைத் தழுவி, அவ்வத் தேயங்களின் அரசுமுறை வர்த்தகம் நாகரிகம் முதலியவற்றில் நல்லனவற்றைத்தெரிந்து கைக்கொண்டு, நல்லொழுக்கமும் காரியநிர்வாகஸாமர்த்தியமும் உடையரென நன்குமதிக்கப்பெற்று, உயரிய நிலையில் உத்யோக பதவியெய்தி நமக்கு நன்மையும் மேன்மையும் செய்தற்குரியராயினர்.

நெடிது தூரிய நிலங்கட்கு முன்பு போவதெனின் எத்துணை நாட்களும் மாதங்களும் செல்லும்? போகும் நெறியிடையே கள்வர் முதலியோரால் எத்துணை இன்னல்கள் உளவாம்? அவை யொன்றுமின்றி, விரைவிலும் இரவிலும் எளிதாகப் போக்குவரவுசெய்யுமாறு இருப்புப்பாதைகளையும், பன்னூறு காதங்களுக்கப்பாற்பட்டுள்ளதேயங்களுக்குச் சிறிதுநேரத்தில் செய்தியெட்டும்வண்ணம் மின்சாரத் தந்தியையும் ஏற்படுத்தி, மற்றும் தபால் ஸ்தாபனமும், சாலைகளும், எம் மதத்தினர்க்கும் சம்மதமாம்படி ஒரேவிதமான நீதிவிசாரணை நிலயங்களும், இன்னும் இவைபோல்வனவாய விஷயங்களும் இவ்வாங்கில அரசுமுறையில் கிடைத்துள்ள நன்மைகளெனப்பாராட்டும் வண்ணம் செய்திருக்கின்றனர். சுருங்கக்கூறுமிடத்து, இங்ஙனம் மேற்குறித்த விஷயங்களே இந்தியாவைச் செல்வத்திலுயர்த்தின; பலநாடுகளும் ஒன்றற்கொன்று உதவியாம்விதம் அணிமையாக்கின; எங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் நட்பைப் பெருக்கின; பலவகை மக்களும் ஆங்கிலரோடு கலந்துறவாடி நலம்பெறச்செய்தன.

உலகினது விசித்திர அமைப்பினைக்கண்டு இறைவனது பரம சக்தியையும் பரமஞானத்தையும் புகழ்வதுபோல, அரசுமுறையில் மக்களுக்குளவாம் நன்மைகளை நாடி அரசனது நற்குணத்தைப்

பல்லுயிர்களும் பாராட்டிப்புகழும். குழவிகள் தாயின்பால் நோக்கி வாழ்வதேபோலக் குடிகள் அரசனது கோல்நோக்கி வாழும். எனவே, உயிர்களைக் காத்தற் கடமைபூண்ட அரசன் தன்கோலின்கீழ் வாழுங் குடிகட்குச் செங்கோலனுகிச் செம்மையுளதாக அரசுசெலுத்தக் கடவனேயன்றி, தனது செல்வச்செருக்கினுல் கோல்கோடி அவர் கட்குத் தீமையாவனவற்றைச் செய்து தனது இன்பத்தில் மகிழ்ந் திருத்தல் தகாது. இதுபற்றியன்றே,

"....................கோல்கோடிமாராயம்
செய்யாமை முன்னினிது செங்கோல னுகுதல்
எய்துந் திறத்தா லினிதென்ப"

எனப்பூதஞ்சேந்தனுர் என்னும் சங்கப்புலவர் கூறினுர். மழைமுதலிய வளங்கள் செங்கோலரசர் இல்லாத தேயத்தில் இல்லையாம்.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசிலா ரில்வழி யில்லை—அரசும்
இல்வாழ்வா ரில்வழி யில்"

எனக் காகனுர் என்னும் மற்றொரு புலவர் கூறுகின்றுர். மக்கள் மன்னவன் பால் அன்புடையராய் ஒழுகுதல் பெரும்பாலும் அவன் செங்கோலனுய்த் தங்களுக்கு நன்மை புரிதலினுலேதான். ஆயினமை பற்றி அவன் தன்னை உயிர்கள் தாயெனக்கொண்டு அன்புபாராட் டித் தனது ஆணையின்வழிச் செல்லுமாறு அவற்றை அருளொடு பாதுகாத்தல் வேண்டும். எனினும்,

"இவறலு மாண்பிறந்த மானமு மாணு
உவகையு மேத மிறைக்கு" எனவும்,

"ஓர்ந்துகண் ணேடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை"

எனவும் உலகுய்யத் தோன்றிய செந்நாப்போதார் திருவாய்மொழிந் தருளியவண்ணம், தனது கோலின்கீழ் வாழ்வார் குற்றஞ் செய்வ ராயின் அக் குற்றத்தைநாடி, அது செய்தார் தனது உயிரினுஞ் சிறந் தாராயினும் அன்னோர்கண்ணே கண்ணேடாமே நடுவுநிலைமையைப்

பொருந்தி, அக் குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடு ஆராய்ந்து அவ் வளவினதாகச் செய்தல் அரசனுக்கு முறையென்றமையின், தீமைசெய்தாரைச் சிக்ஷித்தலும் வேண்டும். இதனை,

"ஒருமைந்தன் றன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிசெல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் றேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த வரசாட்சி யரிதோமற் றெளிதோதான்"

எனப் பெரியபுராணமுடையார் கூறும் மனுநீதிச்சோழனது நீதியும்,

"எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த்—தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங்காணா
எனச்செய்யார் மாணா வினை"

எனப் பழமொழியாசிரியர் கூறும் பொற்கைப் பாண்டியன் செய்தியும் வலியுறுத்தா நின்றன. துஷ்டநிக்ரகமும் சிஷ்டபரிபாலனமுஞ் செய்தல் காவலர்க்குரிய கடமையேயாம்.

"நாயகன் நல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்குந்
தாயென இனிது பேணத் தாங்குதி தாங்கு வாரை"

என ஸ்ரீராமன் சுக்கிரீவனுக்கு உரைத்தருளியதாகச் சிஷ்டபரிபாலன தர்மத்தையும்,

"ஆயது தன்மை யேனும் அறவரம் பிகவா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியாற் றீமை யோரை"

எனத் துஷ்டநிக்ரக மர்மத்தையும் கல்வியிற் பெரியார் ஒரே கவியினுள் மாதுரியமும் சாதுரியமுந் தோன்றக் கூறியது மிகப் பர்ராட்டற் பாலது.

இவ்வாறே, நம் ஆங்கில அரசரும் தம்மாலேனும், தமக்குக்கீழ் நிலையிலுள்ள உத்தியோகஸ்தராலேனும், பகைவராலேனும், கள்வராலேனும், மற்றெவராலேனும் நமக்கு யாது தீதும் வாராதவாறு நம்மைப் பாதுகாத்துவருவதுமன்றி, வற்கடம் நோய் முதலியவற்றால் துன்பம் வருவதாகத் தோன்றியவிடத்து அவ்வபாயங்களைத் தடுக்கத்

தக்க உபாயங்களை நாடிச்செய்து பெற்றதாய்போலப் போஷிக்கின்றனர். அவர் பல்லாண்டுகளாக நம்மை ஆண்டு நம்மோடு பழகியிருப்பினும், ஊண், உடை, நடை உருசி முதலியவற்றில் நம்மினும் வேறுபாடுடையராதலின் சிற்சில அமயங்களில் நமக்கு இன்னவை நன்மையாகுபவை எனவும், மற்றின்னவை தீமையாகுபவை எனவும் அறிதல் அவர்க்கு இயலாதாதல்பற்றி, நமக்கு வேண்டுவன இவை வேண்டாதன இவை யென்பதைக் காலம் இடனறிந்து அவர்க்கு நாம் எடுத்துரைத்து நமக்கு ஆவனமுடித்துக்கொள்ளல் வேண்டும். அங்ஙனம் நாம் கேட்பனவற்றை அவர் அங்கீகரித்து ஆவனசெய்வர். இங்ஙனம் குடிகட்கு நல்லன நாடிச்செய்யும் அறநிலைவழுவா அரசரிருக்கும் நாட்டில் காலமழை பிழையாது பொழியப் பல்வளனும் மல்கியிருக்கும்.

> "இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
> பெயலும் விளையுளுந் தொக்கு"

என்பது பொய்யாமொழியன்றோ? பாண்டவர் நாடுதுறந்து காடு புகுந்து பன்னிரண்டாண்டு கடந்து விராடதேயத்து உறைந்துழி, பாண்டவர் மாண்டவராக வேண்டிய துரியன் முதலோர், அந் நாடு நிலவளன் சலவளன் முதலிய பலவளங்களும் மலியப்பெற்றுப் பொலிவுற் றிருந்தமை கேள்வியுற்று அக் குறிப்பினாலே, ஆண் டவருளராதல் வேண்டுமென்று ஊகித்தறிந்தனர் என்று உரைக்கப்பட்டுளது. நல்ல அரசர் இல்லாதநாடு பொல்லாதகாடு போல்வதாம். ஸ்ரீராமன் அயோத்திதுறந்து அடவியடைந்துழி அச் சாகேதநகரம் நலனழிந்து பொலிவொழிந்து இருளடைந்த உலகம்போன்றிருந்தது என்று சொல்லப்பட்டுளதன்றோ?

## 5. ராஜபக்தியைக் கொண்டொழுகுமாறு.

மன்னுயிரைத் தம்முயிர்போல மதித்துத் தளராத பேரன்போடு தாங்கித் தாரணி முழுதாண்ட தருமகுண ஸம்பன்னரான அரிச்சந்திரன், நளன், ஸ்ரீராமன், தருமபுத்திரன் முதலிய மன்னவர், வானம் மும்மாரி வழங்க, வையம் வளஞ்செழிக்க, தானந்தழைக்க, தவம்வளர, அவந்தளர, புல்வாயும், புலிப்போத்தும், பருந்தும், பைங்கிளியும்

ஒருவழியோடி யொத்துவாழ, மணியின்கண் ஒளியும் மலரின்கண் மணமும் உடலின்கண் உயிரும்போல நின்று, கரி பரி தேர் காலா ளென்னும் நாற்படையாலும் வில் வாள் வேற்படையாலுமேயன்றி, தமது நிலையாலும் அருளாலும் பெயராலும் பகையை அடக்கிப் பார்காத்து வந்த காலத்து,

"கோதை நித்திலஞ் சூழ்குளிர் வெண்குடை
ஓத நீருல கொப்ப நிழற்றலால்
தாதை யேயவன் தாணிழற் றங்கிய
காத லாற்களிக் கின்றதிவ் வையமே"

என்றவாறு, மக்கள் அவரது குளிர்வெண்குடை நிழலில் தங்கி அவரைத்தமக்கு நற்றாயும் நற்றந்தையுமெனப் போற்றி வழிபட்டு வாழ்ந்தனர் என்று அறிகின்றோம். மற்றும், அவர் விதிவயத்தராய் நாடிழந்து காடடைந்து கேடுழந்தபோழ்து குடிமக்களனைவரும் அவரைப் பிரியப் பிரியமின்றி அன்னாரைப் பின்றொடர்ந்து சென்றனர் என்றும் அறிகின்றோமே.

"ஏழைய ரனைவரு மிவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதுகையர் கிளைகளு மினையார்
வாழிய வென்வவர் மனனுறு கட்வுட்
டாழ்குவர் கவுசலை தயரத னெனவே"

"அஃதைய நினையெம தரசென வுடையேம்
இஃதொரு பொருளல வெமதுயி ருடனேழ்
மகிதல முழுதையு முறுகவிம் மலரோன்
உகுபக லளவென வுரைநனி புரிவார்"

என ஸ்ரீ ராமபிரானது நல்வாழ்வை மக்களனைவரும் விரும்பிக் கூறின மையையும்,

"கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்"

"ஆதி யரச னருங்கே கயன்மகண்மேற்
காதன் முதிரக் கருத்தழிந்தா ளுமென்பார்
சீதை மணவாளன் றன்னோடெந் தீக்கானம்
போத மதுவன்றேற் புகுது மெரியென்பார்"

என அவன் பிரிவுற்ற காலைப் பரிவுற்றுரைத்தமையையும் பாரகாப் பியத்திற் படித்தறியாதார் உளரோ? இவ்வண்ணம், நந்தேயத்தில் ராஜபக்தி யென்னும் இச் சிறந்த குணம் எத்துணையோ ஆயிர ஆயிர வாண்டுகளாக நம்மவர்க்குப் பேரணிகலனாய் விளங்கியது என்பதற்கு இஃதேயன்றி இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் நம் பண்டைப் பெருநூல்களில் உள்ளன. பெருமாண்பு பொருந்திய நம் ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் செம்பொன் மணிமுடிசூடிச் செங்கோல் கைக் கொண்ட சிறப்பினை டில்லிமாநகரில் நம்மவர் ஒருசேரத்திரண்டு மஹாஸபைகூடி மிக்க கோலாகலத்துடன் கொண்டாடிய அமயத்து அப்பெருந்தகைமன்னர்பெருமான் தமது அன்பேவடிவான அருமைத் திருமனைவியாரோடு அழகிய அரிமணியாதனத்து வீற்றிருந்து நம் மனைவர்க்கும் நற்காட்சி யளித்து,

"கனமுயரு நுஞ்சாதி குலமத வொழுக்கங்
களுக்கொரிடை யூறின்றிநுங்
கல்வியறி விற்குரிய பதமீது மோரங்
கருத்திற் கொளாமலென்று
மனமுவந் துரைசெய்து முறைசெய்த மூதாட்டி
வண்கோ னடாவுதருமன்"

என மனமகிழ்ந்து புகழ்ந்துரைக்கும் வண்ணம் நன்மொழிகூறிய பின்னர் தமது ஜெனனதேசத்தில் தம்பதிநோக்கி அத் தம்பதிகள் புறப்படுமளவில், நம் இந்துமகாஜனங்கள் அவர்சென்ற சிறப்புடைத் திருவீதியின் புழுதியைத் தம் சிரம் நெற்றி உரம் முதலிய உத்தம உறுப்புக்களில் தரித்தும், தாம் பூண்டிருந்த சட்டைப்பையினுள் எடுத்துக்கொண்டும், அதனை அத்தனை அருமை பெருமைபாராட்டி, நிலமிசை வீழ்ந்து முத்தமிட்டும் இன்னணம் பல்வகையாலும் தமது ராஜபக்தியை வெளியிட்டனரெனக் கேள்வியுற்றோம். அது கண்டு, அன்புருக்கொண்டனைய நம் சக்கரவர்த்தினியன்னையார் உள்ள முடைந்து கண்ணீருகுத்தனராம். மகுடாபிஷேக மகோத்ஸவக்

கொண்டாட்டநாளில் தோன்றிய குழவிகட்குச் சிலர் ஜ்யார்ஜ் என நாமகரணமுஞ்செய்தனராம். இவ் வொருவிஷயத்தைச் செவியுறும் பொழுது, ராஜபக்திச் செல்வச்சிறப்புடைமக்கள் நந்நாட்டிற்போல மற்றெந்நாட்டினு மிராரென்றெண்ணுதற்கு ஐயமுண்டோ? அன்றியும், நம்மவர் இயற்கையாகவே ராஜபக்தியை மிக்குடையரென்பதை வேறொரு செய்தியும் நன்கு விளக்கும்; வீறுபெரிதுடைய நம் வேந்தர் தலைவர் தமது அன்பிற்பிரியா இன்பவடிவாகும் பத்தினியாரொடு மணிமுடிசூடி வையகங்காவல் கையகங்கொண்ட வைபவத்தை டில்லிப் பெருநகரிற் கொண்டாடிய அற்றை ஞான்றே, பல்வேறு மதம் கோட்பாடு முதலியவற்றை யுடையரான ஆண்பாலார் பெண்பாலார் பெரியார் சிறியார் அனைவரும் ஒரேகாலத்தில் பெரிய நகரங்களினும் சிறிய கிராமங்களினும் அம்மகோத்ஸவத்தைத் தத்தமக்குரிய திருமணம் முதலிய சுபவினையேபோலத் தத்தம் வீடுகளில் பாராட்டிக் கொண்டாடியதே யன்றி, தேவாலயங்களில் சிறப்புவகையில் பூசை, விழவு, ஜெபம் முதலியசெய்து, ஆதுலர்க்கு அன்னம் ஆடை முதலிய அளித்து, அரசர்க்கு ஆயுராரோக்கியாதி அனைத்து நலனுஞ் செழித்துவளரும்வண்ணம் ஒருமையோடு பெருமைபெறச் செய்த செய்தியொன்றுமே நம்மவரது ராஜபக்தியின் மேம்பாட்டினை விளக்குதற்குச் சிறந்த சான்றாகும்.

## 6. இக்காலத்துச் சில குறிப்புக்கள்.

இங்ஙனம், வழிவழியே பல்லாயிரமாண்டுகளாக ராஜபக்திச் செல்வம் ஓங்கிவிளங்கும் இத்தேயத்தில், சென்ற இரண்டோராண்டுகளாக நம்மவருட் சிலரை ராஜபக்தியற்றவரென்று பிறர் வசைகூறுமாறு நேர்ந்தமை எதனாலேயோ? இப் பழிசுமத்தப்படுவோர் பெரும்பான்மை சிறுவராவர் இவர் இப் பழிக்குள்ளாவது நல்லறிவும் நல்லொழுக்கமுமுள்ள பெரியாரைப் பேணியடுத்து அன்னார் கூறும் நயவுரைக்குச் செவிகொடுத்து அந்நல்லவற்றைக் கொள்ளாமையினாலோ? நம்முன்னை மூதறிவாளர் வரைந்துவைத்த நன்னூல்களை முறையிற் கல்லாமையினாலோ? அந்நூற் பொருள்களை யெடுத்து நெறிநின்று உணர்த்துவாரில்லாமையினாலோ? உணர்த்தவல்லாரைப் பெற்றுவைத்தும் அன்னார் அந்நூற்களைக்கொண்டு நம் சிறுவர்க்கு ராஜபக்தி

முதலிய மேதக்க நீதிகளைப் போதித்தற்குப் போதிய சாதனங்கள் தளர்ந்து முறிந்தமையினாலேயோ? ஆயுங்கால் ஈண்டிறுதியிற் குறித்த ஒன்றே முக்கிய ஏதுவென ஊகித்தற்கு இடமுளது. இற்றைநாள் நமது யூனிவேர்ஸிடி யென்னும் ஸகலகலாசங்கத்தினர் நந் தேயபாஷைப் பயிற்சித்திறத்துச் செய்துள்ள புதிய ஏற்பாட்டினை நம் இளைஞர் நன்கறியாமை இதற்கு ஏதுவாமென ஒருவாறு கூறலாம். இப் புதுவதொருவிதியினைச் செய்துவிட்ட புருடர் இவ்வாறு செய்வேமாயின் நம் இளைஞர் செந்தமிழ் முதலிய தேயமொழிகளில் ஊக்கமிகக்கொண்டு செவ்வனே கற்றுத் தேர்ச்சி பெறுவரெனும் நற் கருத்துடன் செய்தனரென்று நுனித்தறிந்து அவையிற்றைப் போற்றிக் கல்லாது கைவிட்டமை கல்வியின் அருமை பெருமைகளை அறியவல்லார் எல்லார்க்கும் கவலையைப் பயந்தது மன்றிக் கனக்குறைவையுஞ்செய்தது. [இவ் விஷயம் ஈண்டு எடுத்து விரித்துரைக்கத் தக்கதொன்றன்று. விரித்துரைப்பின் அஃது எடுத்த விஷயத்தை விடுத்து மற்றொன்று விரித்தல் என்னுங் குற்றத்தினுட்படும். இதனைச் சமயம் வாய்ப்புழி விளங்க விரித்துரைப்பேன்.] சற்றேறத்தாழ ஈராண்டுகளாக, நம் மாணவக்குழாத்தினருட் பலரோ சிலரோ தமது நிலைமையையும் கடமையையும் நன்குணர்ந்து ராஜபக்தியில் ஊற்றங்கொள்ளவில்லை யென எனதுகருத்திற் புலப்படுவது மன்றி, இவ்வாறே நம் அரசாட்சித்தலைவரால் நன்குமதிப்படைந்துள்ள புலவரொருவர் சிற்சில அமயங்களில் வெளிப்படையாகக் கூறக்கேட்டதுமுண்டு.

## 7. ராஜபக்தியை வற்புறுத்தல்.

ஆயினமைபற்றி, கல்வியிற் பயின்று மேனிலைபெற்று இம்மை மறுமைப்பயனை யெய்திவாழ முயன்றுவரும் செல்வச்சிறுவர்காள்! யான் நும்பால் மிக்க அன்பாற் சொல்லப்புகும் சில செய்திகளைச் செவிக்கொள்வீராக; அரசரைத் தெய்வாம்சமென்று உணர்ந்து அவராணைக்கு அமைந்து வாழுக.

"சக்கரநெறிநில்"

என்னும் அரும்பொருள் நீதியை நீவிர் அறிந்திலீரோ? ஆரைப் பகைக்கினும் அரசரைப்பகையற்க. அவர் சீறினுலுய்யுமிடம் யாது?

"வேந்தன் சீறி ஞந்துணை யில்லை."

கடல்கொதித்து வெந்நீரானால் அதனை ஆற்றத் தண்ணீரேது? மழைக்குக் குடைபிடிக்கலாம்; இடிக்குக் குடைபிடிக்கலாமோ? ஒருவேளை அவரது அரசுமுறையிற் சில செயல்கள் நமக்குச் சால் புடையன வல்லவெனத் தோன்றினும் அவை இறுதியில் நன்மை பயப்பனவேயாகலாம். ஆகவே, அவர்மீது குறைகூறாது அமைந்து நிற்றல்வேண்டும்.

"சானோக்கா தெத்துயரஞ் செய்திடினுந் தார்வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே"

என ஞானங்கனிந்து பற்று முற்று மற்று நின்ற பெரியாரும் பணித் தருளினர். தந்தை தன் மைந்தனுக்கு இதமே செய்ய எண்ணுதல் போல, அரசர் தம் பிரஜைகளுக்கு நலனேபுரிய நாடுவர். ஆதலின், அவரைத் தந்தைபோலவே கொண்டு ஒழுகுவீராக. மைந்தன் தந்தை யிடத்துத் தனக்குவேண்டும் பொருளை விநயமாகக்கேட்டுப் பெற்றுக் கோடல்பேல நீவிர் அரசரிடம் நுமக்குவேண்டுவனவற்றை மென் மையும் நன்மையுந்தோன்ற விளம்புமாறு விளம்பிப் பெற்றுக் கொள்வீராக. இவ்வாறன்றி, அரசர்க்கு மாறுநின்று நெஞ்சில் வஞ்சனைசூழ்ந்து ஆகாதன செய்து அல்லலுறற்க. இராஜவிரோதிகள் இம்மையில் இன்பமிழந்து நிந்தையடைந்து மறுமையில் துன்பம் நுகர்ந்து வருந்துவர் என அறநூல்கள் முறையிடுகின்றன. நல்லது பிள்ளைகாள்! நுந்தமக்கு ராஜபக்தியைச்சுட்டிக் கூறத்தகுவன மற்றும் பலவுளவேனும் அவையெல்லாம் ஈண்டு எடுத்து விடுத்து விரித்துரைக்கப்போதிய இடமுங் காலமும் இல்லையாகலின் இங்ஙனே காட்டிய சில கூறுபாடுகளைக் கைக்கொண்டு ராஜபக்திச் செல்வராய் நெடிது வாழ்வீராக. இனி, நுமக்குக் கல்விபயிற்றும் ஆசிரியர்க்கு இதனைச்சுட்டிச் சில சொல்வான் அவர்முகந் திரும்புகின்றேன்.

கலாசாலைகளிலும் பிறவிடங்களிலும் கல்வி கற்பித்துவரும் போதகாசிரியர்காள்! நீவிர் அரசர் முன்னர் நாம் நடந்து கோடற் குரிய முறைகளை இளைஞர்க்கு அடுத்தடுத்து எடுத்தியம்பி வற் புறுத்தல்வேண்டும். நீவிர் கற்பிக்கும் ஏனைய பாடங்களோடு ராஜ

பக்தி யென்னும் விஷயத்தையும் ஒரு பாடமாக எடுத்துரைப்பீராக. மற்றும் பல நீதிநூல்களையும் கற்பிப்பீராக. சிறுவர்க்குத் தெய்வ பக்தியோடு சாதி மதாசாரம் தவறுதவாறு அவை தம்மை எடுத்துரைத்திடுக. ஆனால், நந்தேயம் பேதப்பட்ட சாதி மதக்கோட்பாடுடையதொன்றாதலினாலே அவற்றைப் போதிக்குங்கால் பொது வகையாற் போதித்தலே சால்புடைத்தாம். சிறுவர்க்கு இளமையின் கண்ணே ராஜபக்தியை இனிதுணர்த்தாமையினாலே அவர்கள் பருவம் முதிர்ந்தபோது தான்றோன்றிகளாய் ராஜவிரோதிகளாகவுங் கூடும். சிற்சில அமயங்களில் கலாசாலைச் சிறார்கள் அரசுமுறைக்கு அடுத்த விஷயங்களில் தலையிட்டுப் பேசித்திரிவதைக் காண்கின்றோம். "இளங் கன்று பயமறியாது" என்றவாறு அன்னார் சில சந்தர்ப்பங்களில் தமது நிலையை மறந்து அணைகடந்து அச்சமின்றியும் பேசுவர். அவ்வாறு நெறிதவறி முறைவழுவி உரையாடிய சிலர் அரசதண்டத்துக்குள்ளாயினதையும் கண்டுங் கேட்டுமுளேம். ஆகவின், அறிவும் அநுபவமும் மிக்குடையீரான நீவிர் அரசாது பெருமையையும் நமது கடமையையும் இளைஞர்க்கு இனிதுரைத்து, அவர்களை உலகிற்கு உபகாரிகளாக்குவீராக. "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்", "முதற்கோணல் முற்றுங்கோணல்" என்றபடி இளமையிற்பயிலுஞ் செயல்கள்தாம் நீண்டுநிற்கும். இளைஞரைப் பயிற்றுதலோடு நீவிரும் ராஜபக்திசீலராய் ஒழுகல்வேண்டும். அவ்வொழுக்கம் நும்பால் இல்லாதபோது அவர்க்கு அஃது எவ்வாறு உளதாம்? நீவிர் உரையளவில் ராஜபக்தியை அவர்க்குப் போதித்தல் அமையாது. ஒழுக்கத்தானும் அதனை அவர்க்கு உணர்த்தல் வேண்டும். அச்சுக் கோணுமாயின் அதனாற் செய்யப்பெறும் உருக்களும் கோணுமல்லவோ? பிள்ளைகளை ஒழுக்கமுறையில் உருப்படுத்துமவர் நீவிரல்லீரோ?

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்"

"கற்றுப் பிறர்க்குரைத்துத் தாமில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை—சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவர்
சொல்லாமே சூழ்ந்து சொலல்"

என ஆன்றோர் உரைத்தவை நீவிர் அறியாதனவல்லவே. ஆகவே, இங்ஙனம் சுருங்கக்குறித்த இவ் விராஜபக்தியை நீவிரும் மேற்கொண்டு பிறர்க்கு முணர்த்தி உலகை வாழ்விப்பீராக.

மற்றும், பத்திராசிரியர் பல்பேரவைகளிற் பரக்க உபந்யசிப்போர் தொடக்கத்தராய வேறு நிலையினுள்ளாரும் மேற்கூறியவாறு, நமக்கு மனுமுதலிய நூல்களால் விதிக்கப்பெற்றதும் நம் முன்னோரால் அனுசரிக்கப்பெற்றதுமான ராஜபக்தியை எங்கும் பரவிவரச் செய்வதோடு நமக்கு நலஞ்செய்வன இன்ன இன்னவென அரசர்க்குத் தக்க சமயங்களில் எடுத்துரைத்து உலகினுக்கு நலன்புரிய நாடுவாராக.

## 8. முடிவுரை.

"கண்ணெனப் படுவ மூன்று காவலன் கல்வி காமர்
விண்ணினைச் சுழல வோடும் வெய்யவ னென்னும் பேர
எண்ணினுள் தலைக்கண் வைத்த கண்ணஃ தில்லை யாயின்
மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னோ"

என்றபடி உலகிற்குக் கண் மூன்றெனக் கூறுப. அவை அரசனும் கல்வியும் ஆதித்தனு மென இவை. இக் கண்கள் மூன்றனுள்ளும் முதற்கண் மொழிந்தகண் ஒழிந்தகண்கள்போலன்றி உயிர்கட்கு உறலாகும் உறுகண் தீர்க்கவல்லது; அஃதில்லையாயின் உலகிற்கு இன்னலென்னும் இருளொழித்தற்கு வேறென்னுளது?

"புரந்திடு மாலே யென்னப் போந்திடு மன்னவன்பால்
நிரந்தர மன்புளானே நிலந்தனிற் புகழின் பெய்தும்
கரந்திடும் விரோதி யானோன் காய்தரு துன்ப மெய்திப்
பரந்திடு நரகத்துற்றுப் பாடுற வருந்து வானால்"

எனப்படலால், அரசன்பாற் கடவுட்டன்மையைக் கருதி அவன்மாட்டு அன்புகொண் டொழுகுவோன் மன்னனது மதிப்பெய்தி வாழ்வுறுவான். அவனை இகழ்ந்து பகைத்தொழுகுவோன் இருமைப் பயனு மிழந்து வருந்துவன்.

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"

எனப் புறநானூற்றினுள் மோசிகீரனூர் என்பாரொரு மூதறிவினர் கூறுமாறு, இந் நிலவுலகிற்கு நெல்லு முயிரன்று, நீருமுயிரன்று; பின்னை இம் மலர்தலை ஞாலம் மன்னனுகிய உயிரையுடையது; அவ் வுயிரின் பண்பினையறிந்து போற்றி யொழுகினன்றே நலம் பெறலாவது. ஆகலின், ஆருயிர்போலச் சிறந்த அரசர்பால் மக்கள் அன்புகொண்டு ரராஜபக்தி மார்க்கத்தில் ஒழுகி இறைவனது திருவருள்பெற்று இம்மை மறுமையி னின்பமுற்று நெடிது வாழ்வாராக.

சுபமஸ்து.

திருவல்லிக்கேணி,
10—5—1913.

கா-ஸ்ரீ. கோபாலாசாரியன்.

---

உ

# வானசாஸ்திரம்.

(கஙஉ-ம் பக்கத் தொடர்ச்சி.)

அஸ்தமாறும் கைத்தலம்போல உத்திரத்திற்குக் கிழக்கிலுள்ள சிறு ஒளிப்படலங்கள். ஐரோப்பியர் கோமாபெரேநிஸஸ் என்பர்.

சித்திரை 3-ம் சிறுபுலிக்கண்போலத் தோன்றும்.

சோதி துலக்கத்தொருமணி யெனப்பெறும். சுவாதி உச்சமாகும் போது பெய்த மழைத்துளியில் சர்ப்பத்தின் விஷத்தைக் கலந்து ஒருவருக்குக் கொடுத்தா லது அமிர்தத்தினு மினியதாமென்பதொரு கதை. ஐரோப்பிய ரிதனை ஆர்க்டோரஸ் என்பர். இது பூடிஸ் என்னுங் கூட்டத்திற் பிரகாசிப்பது. ஆனிமாதத்தில் சுவாதி முன்னேரத்திலுச்சமாம். இதற்கதிக தெற்கே சற்று மேல்புறமாய் அநுஷந்தோன்றும். வடக்கில் சப்தரிஷிமண்டலந் தோன்றும்.

அநுஷமானது முடப்பனையின் றலைபோலத் தெற்கே ஆனியின் பிற்பாகத்தில் நடுவிற் சிவந்த வர்ணமுடைய ஒன்று பக்கத்திற் சிறிய

விரண்டு உடுக்களுடன் தெற்கு வடக்காகத் தோற்றுவதாம். இதற்குத் தெற்கில் மூன்று நக்ஷத்திரங்களுள்ளன. இதனை ஐரோப்பியர்கள் விருச்சிகவிராசியின் முக்கிய தாரை யென்பர். இதற்கு அன்டாரஸ் என்று பெயர். தயாறு வென்பவன் தன் சாமர்த்தியத்தா லெல்லாவற்றையும் படைக்க, சூரியன் தானெல்லாம் செய்வதாக இறுமாப்புற்றபடியால் அதன் கர்வத்தைப் பங்கப்படுத்த இந்த விருச்சிகத்தைப் படைத்ததாக ஒரு கதையுண்டு. நம்முள்ளும், விசுவாமித்திரர் திரிசங்குமகாராஜனைச் சொர்க்கத்திற் கனுப்பிய போது தேவதைகள் அவனை ஏற்றுக்கொள்ளாது திருப்பியதாகவும், அக்காலத்து அவ்விருடிபகவான் மகாராஜாவை அங்கேயே நிறுத்தி நக்ஷத்திரங்களில் அநுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் ஆக நான்கினையும் ஆங்கு ஸ்தாபித்ததாக ஒரு கதை சொல்லப்படுகிறது. எவ்வாறாயினும், வருடத்தி லொருகாலத்திற் சந்திரன் அவ்வழியே செல்லுகிறானென்பதுண்மை.

கேட்டை நான்கு நக்ஷத்திரங்கள் அநுஷத்திற்குக் கீழ்த் தலையி லொன்றும் அதற்குக்கீழ் மத்தியிலிரண்டும் அடியிலொன்றுமாகத் தோன்றும்.

மூலம் நான்கும் காளத்தைப்போன்று கேட்டைக்குக் கிழக்கில் தலையிலிரண்டும் கீழே யிரண்டுமாகத் தோன்றும்.

பூராடம், உத்திராட மிரண்டும் அதற்குக் கீழ்புறமாக நீட்டுப் போக்கில் ஒரே அளவினதாகத் தோன்றும்.

திருவோணம் மூன்றும் வானத்தின் மத்தியில் நடுவணென்று அதிக சோதியினையுடையதாயும் பக்கத்தே யிரண்டு சற்றுக்குறைந்ததாயும் தோன்றும். இதற்கு ஐரோப்பியர்கள் முறையே அகுலி யென்றும், அடேர் என்றும் பெயர் கூறுவர்.

அவிட்டம் திருவோணத்திற்குப் பின்னர்த் தோற்றுவது. ஐரோப்பியர் டால்பினென்பர்.

சதயம் அதிக மங்கலாய்த் தோன்றும்.

பூரட்டாதி, உத்திரட்டாதி யிரண்டும் சேர்த்து நோக்கின் புரட்டாசிமாதத்தி லந்திப்போதி லுச்சியில் நான்கு நக்ஷத்திரங்கள் சதுரமாயும், அதனையொட்டி மூன்று வில்வளைவாகவும் கீழ்புறம் வடபுறத்திற் றோன்றுவதாம். ஐரோப்பியர்கள் முன்னை யிரண்டிற்கும் பெகாஸி என்றும் பின்னவைகட்கு ஆந்தரமேடாவென்றும் பெயர் கூறுவர்.

ரேவதி, 'உத்திரட்டாதிக்கும் அசுவினிக்கு மத்தியிலுள்ளது. இதில் பூமிக்கும் வானத்திற்கு முக்கியமாயுள்ள ஸெடாபீசியமென்பது மறைந்துவிட்டது. அதனால் வானசாஸ்திரிகள் ஒன்றையும் நிச்சயஞ்செய்யமுடியாது தடுமாறினர்.

வடக்கில் ஸப்தரிஷி மண்டல மொன்று தோன்றுவதைக் காணலாம். சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் வடபுறமாக வளைவாய் ஏழு நக்ஷத்திரங்களையு மதன்முன்னூற் சில தாராகணங்களையுங் காணலாகும். இவற்றை ஐரோப்பியர் உர்ஸாமேஜர் என்று சொல்வர். இக்கூட்டத்தைப்பற்றி இந்தியராகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டியதவசியமேயாம். வானத்தைக்காட்டி யருந்ததியிருக்குந் தன்மையாய் நீயுமிருவென மணமகனுக்கும் மணமகட்கும் காண்பிப்பதை ஸ்தூலாருந்ததி நியாயமென்று சொல்லுவதும் கற்பிலருந்ததி யென்பதும் இக்கூட்டத்திற்றோன்றும் பெருந்தாரைகளுள் ஆறுவதன்கீ ழொரு சிறுதாரையா யுற்றுப்பார்ப்பாருக்குத் தோற்றுவதையேயாம். இதை அருந்ததி யென்பர். ஒருவனிறக்க ஆறு திங்களின் முன் இவ்வுடுத் தோற்றமாட்டதெனவுங் கூறுவர்.

சப்தரிஷி மண்டலத்திற்கு நேர் தெற்கில் வானத்தின் தென்புறமாகச் சிலுவைபோன்ற ஒன்று காணப்படும். இதற்கு ஐரோப்பியர் ஸதர்ன்கிராஸ் எனப்பெயர் கூறுவர். இதன் நான்கு நக்ஷத்திரங்களும் பளீரென ஆகாயத்தில் சித்திரை, வைகாசி மாதங்களில் இரவின் முற்பாகத்திற் றோற்றும்.

அசுவதிநக்ஷத்திரத்திற்கும் பூரட்டாதி, உத்திரட்டாதிக்கும் நடுவாக வடக்கே ஆங்கிலத்தில் W போன்றதாயினும் அதுமாதிரி

யின்றிச் சற்று விரிவுடையதாக ஒன்று புலப்படும். இதற்குக் காஸி போப்பியா என்று பெயர். இது புரட்டாசி பிற்பாகம் ஐப்பசி முற்பாகத்தில் சுமார் 8-மணிக்குமேல் நேர் வடக்கிற் காணப்படும். இத னிருப்பைக்கொண்டு இதனைச் சுலபமாக வறியலாம். இவைகளே முக்கிய தாராகணங்களாம்.

தெற்கே கேட்டையின் மத்தியிலிருந்து உச்சியில் திருவோணத்தின் வழியாக வடகிழக்காய்ப் பெரிய வெண்படல மொன்றோடும். இதற்கு க்ஷீரவலயமென்று பெயர் ஆங்கிலேயர் மில்கிவே. (Milky Way) என்று கூறுவர். இது அநேக சிறு நக்ஷத்திரக் கூட்டமென்றும், அவை ஒரே படையாக விருப்பதால் அப்படி நமக்குத் தோற்றுகிறதென்றுங் கூறுவர். இருட்டுக்காலங்களில் செவ்வையாகப் புலப்படும்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

குறிப்பு:—பரணி, பூரம், விசாகம் என்னும் இந்த நக்ஷத்திரங்களைப்பற்றிய விவரணமொன்றும் இதிலெழுதப்படாதகாரணம் விளங்கவில்லை. ப—ர்.

உ

# தமிழகராதிசபை.

## யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தாருடைய கூட்டமொன்று நாளது௵ ஏப்பிரல்மீ ௪௨ வெள்ளிக்கிழமைப்பின்பகல் ௪-மணியளவில் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலையிற் கூட்டப்பட்டது. சங்கத்து அங்கத்தவர்களும், தமிழ்ப்பாஷையில் அபிமானமுடையவர்கள் வேறு பலரும் அப்போது வந்து கூடினர்.

அப்போது சங்கத்தின் அக்கிராசனாதிபதி ஸ்ரீ: த. கைலாசபிள்ளையவர்கள், மதுரையிலிருந்து தமிழகராதி சபையின் அக்கிராசனாதிபதி றெவ். சாண்டலர் துரை இச்சங்கத்துக்கு எழுதிய கடிதத்தை வாசித்துக்காட்டிச் சபை கூட்டிய உத்தேசத்தைச் சுருக்கி விளக்கிக் காட்டினார்கள்.

அப்போது பின்வரும் நிர்ணயங்கள் அங்கீகாரமாயின. அவையாமாறு:

சைவப்பிரசாரகர் ஸ்ரீமத்-சு. ஏரம்பையாவர்களாற் பிரேரிக்கப்பட்டு பிறக்கிராசி ஸ்ரீ: வ. குமாரசுவாமியவர்களால் அநுவதிக்கப்பட்ட முதலாம் நிர்ணயம்.—

I. தமிழ்ப்பாஷையை அபிமானித்து அதற்கு ஒரு விரிவான அகராதி செய்யும்பொருட்டுச் சென்னைக் கவர்ன்மெண்டார் தொடங்கி அதற்காக லக்ஷரூபா செலவழிக்க உத்தேசித்த நன்றியை இச்சங்கத்தார் என்றும் மறக்கலாகாது.

இந்துசாதன இங்கிலீஷ்ப் பத்திராதிபர் ஸ்ரீ: அ. சபாபதியவர்களாற் பிரேரிக்கப்பட்டு உதவி வித்தியா பரீக்ஷகர் ஸ்ரீ: S. கந்தையா அவர்களால் அநுவதிக்கப்பட்ட இரண்டாம் நிர்ணயம்.—

II. இத்தமிழகராதியைச் செய்து நிறைவேற்றுதற்காக நியோகிக்கப்பட்ட சபையார், இவ்வகராதியைச் செய்யும் முறை முதலிய

எல்லாவற்றையும் தமிழ் வித்துவான்கள் பலரோடும் யோசித்துச் செய்ய எண்ணிய பெரு நன்றியை இச்சங்கத்தாராகிய நாம் என்றும் மறக்கலாகாது.

வெசிலியன் மிசியோன் மத்திய கல்லூரித் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ V. இராமலிங்கரவர்களாற் பிரேரிக்கப்பட்டு, சுப்பிரீங்கோட்டுப் பிறக்கிராசியும், நொத்தாரிசும், முன் தமிழகராதி இயற்றிய ஸ்ரீ: கதிர்வேற்பிள்ளையவர்களின் மருகருமாகிய ஸ்ரீ: S. கதிரேசர் அவர்களால் அநுவதிக்கப்பட்ட மூன்றும் நிர்ணயம்.

III அச்சபையார், பொதுவாக நமது சங்கத்துடைய துணையைக் கேட்டிருக்கிறபடியாலும், தங்கள் விஞ்ஞாபன (Memorandum) இறுதியிற் காட்டிய பல விஷயங்களுக்கு இச்சங்கத்தினுடைய உதவியைச் சிறப்பாகக் கேட்டிருக்கிறபடியாலும், இந்த யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தார் தங்களாலியன்ற உதவிகளையெல்லாம் அவர்களுக்குச் செய்தல்வேண்டும்.

சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமை உபாத்தியாயர் சுன்னுகம் ஸ்ரீ: அ. குமாரசுவாமிப்புலவரவர்களாற் பிரேரிக்கப்பட்டு, உதய பானு பத்திராதிபர் ஸ்ரீ: சு. சரவணமுத்துப்பிள்ளை அவர்களால் அநுவதிக்கப்பட்ட நாலாம் நிர்ணயம்.

IV. சபையாருடைய விஞ்ஞாபனத்தின் முற்கூற்றில் தமிழ்ச் சொற்கள் விஷயமாகச் சொல்லப்பட்ட பல ஆராய்ச்சிவகைகளை அச்சபையாரே யறிந்து மனவுவகையோடு செய்யத்தொடங்கியிருக்கின்றமையால், நாங்கள் சிறிது விரித்துப் பணிவோடு சொல்லுவனவும் அவர்களுக்கு உவப்பாயிருக்கு மென்பதற்கு ஐயமில்லை. ஆதலால் பின் வருவனவற்றை நாங்கள் அவர்களுக்கு அறிவித்தல்வேண்டும். அவைகளாவன.—

(1.) அச்சிடப்பட்டனவும் படாதனவுமாகிய பழைய தமிழ் நூல்களுக்கும் அவற்றைத் தழுவிப் பிற்காலத்திற் சிறந்த வித்வான்களாற் செய்யப்பட்ட நூல்களுக்கும் உரைகளுக்கும் ஒரு நாமாவலி (அட்டவணை) எழுதுவித்தல்வேண்டும்.

(2.) நாமாவலி எழுதுவித்தபின், இலக்கண நூல்களையும், இலக்கிய நூல்களையும், வேதாந்த நூல்களையும், சித்தாந்த நூல்களையும், தேவார திருவாசகங்களையும், நாலாயிரப்பிரபந்ததிருவாய்மொழிகளையும், சிற்பசாத்திரங்களையும், வைத்தியசாத்திரங்களையும், சோதிடம் சல்லியம் முதலிய சாத்திரங்களையும் சங்கீதம் பரதமென்னும் சாத்திரங்களையும், தர்க்கசாத்திரங்களையும், கணிதசாத்திரங்களையும், புராணங்களையும், நிகண்டுகளையும், பிறவற்றையும் வெவ்வேறு பகுதியாக்கி, அவைகளைத் தொகைசெய்துகொண்டு, ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வோரதிகாரியைப் பொறுத்தானத்தில்வைத்து, அவர் மூலமாக அந்தநூல்களைப் பலவிடங்களிலுமுள்ள அவ்வவற்றிற்கு உரிய வித்துவான்களிடங் கொடுத்துச், சொற்களையும் பொருள்களையும் எழுதுவித்தல்வேண்டும். அதிகாரிகள் அவைகளை அகராதி முறையாக்கிச் சபைக்குக் கொடுத்தல்வேண்டும். சபையாரும் அதிகாரிகளும் கூடி, அவைகளைப் பரிசோதனைசெய்து இடைவெளிவிட்டு அச்சிட்டு, அச்சிட்ட பிரதியில் ஒவ்வொன்று முன் எழுதினவர்களுக்கும் பண்டித ஸபைகளுக்கும் அனுப்பிப் பார்ப்பித்தல்வேண்டும். அதன் பின்னரே அச்சிடுதல் வேண்டும்.

(3.) பழைய அகராதிகளில் அநேக வழுக்கள் இருத்தலினால், அவைகளிலுள்ள சொற்களையும் பொருள்களையும் நன்றாக ஆராய்ந்து சேர்த்தல்வேண்டும்.

(4.) தமிழிற் பயின்றுவராத வடசொற்களை நீக்கிவிடுதல் வேண்டும்.

(5.) கிடா கிடாய் கடாய், துடை முதலியனபோல வரும் வழூஉச்சொற்களை வழூஉச்சொல்லென்றே காட்டி அவற்றின் இயற்கை வடிவம் கடா தொடை முதலியனவென்று காட்டுதல் வேண்டும்.

(6.) (க.) சொற்களை எழுதி (உ.) அவற்றிற்குப் பொருள்களும் (ங.) அவற்றிற்கு மேற்கோளும் (ச.) பகுதி (Root) காட்ட வேண்டியவற்றிற்கு அப் பகுதியோடு (ரு) பழைய நூற்பிரமாணமும் (சா) இலக்கணம் (Definition) கூறவேண்டியவற்றிற்கு இலக்கணமும் முறை முறையாக எழுதப்படுதல் வேண்டும்.

(7.) சா, புகு என்பன செத்தான், புக்கான் என வருதல்போலப் பகுதி வேறுபட்டு வருஞ் சொற்களையுஞ் சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

(8.) பல ஸம்ஸ்கிருத பதங்கள் தமிழில் ஒரு சொல்லாய் வருமிடங்களில், அந்தச் சமஸ்கிருத பதங்களைக் கிரந்த எழுத்தில் எழுதி அதன்பின் அந்த அருத்தத்தை எழுதுக. உதாரணம்—அத்தம்— என்ற சொல்லின் கீழ் ஹஸ்தா-கை, அர்த்தம்-பொருள், அர்த்தம்-பாதி, அஸ்தம்-அத்தகிரி.

(9.) அந்நியபாஷைச் சொற்களை இன்னபாஷைச் சொல்லென்று இயன்றவளவு சொல்லுதல்வேண்டும்.

(10.) பழமொழிகள் நியாயங்கள் ஐதிகங்களாகிய இவற்றையுஞ் சேர்த்து விளக்கல்வேண்டும்.

(11.) சொற்களுக்கு அர்த்தமெழுதும்போது அகராதிமுறையை அதிகம் பொருட்படுத்தாமல் பொருளினுடைய கௌரவ முறையை அநுசரித்தல்வேண்டும்.

(இந்த நிர்ணயத்தைப் பிரேரிக்குமிடத்துப் புலவரவர்கள் பல அகராதிகளிலுள்ள வழுக்கள் பலவற்றைத் திரள் திரளாக எடுத்துக் காட்டினார்கள்.)

இந்துகாலீசுத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ-வ. குமாரசுவாமிப் புலவரவர்களாற் பிரேரிக்கப்பட்டு, சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ-சி. கணேச ஐயரவர்களால் அநுவதிக்கப்பட்ட ஐந்தாம் நிர்ணயம்.—

v. நூல்களை ஆராய்ந்து சொற்பொருளெழுதுவோர் பலர் சம்பளமில்லாமல் அது செய்ய இயலாதவராயிருப்பதால், நூலளவுக்கும் பிரயாசத்துக்கும் ஏற்ற சம்பளம் அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் டெப்பியூற்றி பிசுக்கால் (Deputy Fiscal) ஸ்ரீ: ச. சபாரத்தினமுதலியாரவர்களாற் பிரேரிக்கப்பட்டு ஸ்ரீ: தா. பொன்னம்பல பிள்ளை அவர்களால் (M. R. A. S. Retired Excise Commissioner of Travancore) அநுவதிக்கப்பட்ட ஆறும் நிர்ணயம்.—

vi. இவ்வகராதியாற் பிரயோஜனம் அடையத்தக்கவர்கள் இலங்கையிலும் அநேகர் இருப்பதால், நமது இலங்கைக் கவர்ன்மெண்டாரையும் ஒரு தொகைப்பொருள் கொடுக்கும்படி அகராதி சபையார் கேட்கவேண்டும்.

அபிதானகோச ஆசிரியர் நாவலர்கோட்டம் ஸ்ரீ: ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களாற் பிரேரிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் போலீசுஇளார்க்கு ஸ்ரீ: S. W. குமாரசுவாமி அவர்களால் அநுவதிக்கப்பட்ட ஏழாம் நிர்ணயம்.

vii. அகராதி சபையின் அக்கிராசனாதிபதி சென்ற மார்ச்சுமீ கஙஉ எழுதிய உ௮-ம் இலக்கக் கடிதத்தில் இச்சங்கத்தாருள் ஒரு புலவரைத் தங்களுக்கு உசாத்துணைவராகத் தரும்படி கேட்டிருக்கின்றமையின், இச்சங்கத்து அக்கிராசனாதிபதியும், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைவரும் ஆகிய ஸ்ரீ: த. கைலாச பிள்ளை யவர்களையே கொடுத்தல்வேண்டும்.

இவைகளான பின் அக்கிராசனாதிபதியைப் புகழ்ந்து சபை கலைந்தது.

1913-ம் ஞு ஏப்பிரல்மீ 4உ.

மற்றுள்ள இதன் தொடர்ச்சி மறுபக்கத்திற் காண்க.

## 1913-௵ ஏப்பிரல்௴ 10௳ கூடிய யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தில் பின்வரும் நிர்ணயமிரண்டும் சர்வாங்கீகாரமாயின.

1. "நாளது௵ ஏப்பிரல்௴ ௪௳ செய்யப்பட்ட நிர்ணயப்படி தமிழ் நூல்களுக்கு ஒரு அட்டவணை இச்சங்கத்தார் செய்தல்வேண்டும். அதற்காக இலங்கையிலுள்ள தமிழறிந்தவர்களுக்குக் கடிதம் எழுதி, அச்சிட்டு வெளிவராத தமிழ்நூல்களுடைய பெயர்களையும், அவைகளிற் சொல்லப்படும் விஷயங்களையும், அவற்றின் ஏட்டளவு வரியளவுகளையும், அறிதல்வேண்டும். அந்நூல்கள் யார் யாரிடமிருக்கின்றன என்றும், அந்நூல்களைப் பிரதி செய்துகொள்ளத் தருவார்களோ என்றும் அறிதல்வேண்டும்."

2. "பலருக்குங் கடிதமெழுதி இலங்கையிலுள்ள தமிழ்வித்துவான்களுக்கும் தமிழபிமானிகளுக்கும் ஓர் அட்டவணை எழுதல் வேண்டும்."

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

ஸ்ரீ:

# பிழைதிருத்தம்.

---

"செந்தமிழ்"த் தொகுதி-௧௧ பகுதி ௫-ல் ௧௪௬-வது பக்கம் ௧௮-வது வரியில் பிள்ளையவர்களல் என்றிருப்பதைப் பிள்ளையவர்களால் என்றும், ௸ பகுதி ௧௬௩-வது பக்கம் ௨௬-வது வரியில் எதிரிக்கு என்றிருப்பதை வாதிக்கு என்றும் திருத்திக்கொள்க.

பத்திராதிபர்.

---